# STRATEGIC PLAN
# 2020-2025

Lalith Athulathmudali Mahapola Higher Education Scholarship Trust Fund

# மூலோபாய திட்டம்

# 2020 - 2025

# பொருளடக்கம்

சுருக்க விளக்கம்

புலமைப் பரிசில் வழங்கப்படும் பல்கலைக்கழகம்

உயர் கல்வி அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் நிலவும் புலமைப் பரிசில்வழங்கப்படும் தொழில்நுட்பக் கல்லூரிகள்

மஹபொல புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் நிறுவனக் கட்டமைப்பு

மூலோபாயத் திட்டத்தின் பயனர்களுக்கான வழிகாட்டி

நோக்கக் கூற்று

செயற் பணிக் கூற்று

எமது பெறுமதிகள்

இலக்குகள்

1 ஆவது இலக்கு, அதனுடன் தொடர்பான நோக்கங்களுடன் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

2 ஆவது இலக்கு, அதனுடன் தொடர்பான நோக்கங்களுடன் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

3 ஆவது இலக்கு, அதனுடன் தொடர்பான நோக்கங்களுடன் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

4 ஆவது இலக்கு, அதனுடன் தொடர்பான நோக்கங்களுடன் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

5 ஆவது இலக்கு, அதனுடன் தொடர்பான நோக்கங்களுடன் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

6 ஆவது இலக்கு, அதனுடன் தொடர்பான நோக்கங்களுடன் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

மூலோபாயத் திட்டத்தில் பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் முக்கியத்துவம் மற்றும் பணிகள்

மூலோபாயங்களுக்கான (உத்திகளுக்கான) செயலூக்கி

எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல் பகுப்பாய்வு

நிறைவு

மகாபோலா உதவித்தொகை வழங்கும் பல்கலைக்கழகங்கள்

1. கொழும்பு பல்கலைக்கழகம்
2. கொழும்பு பல்கலைக்கழகம் - கணினி அறிவியல்
3. கொழும்பு பல்கலைக்கழகம் - ஸ்ரீபாலி வளாகம்
4. கொழும்பு பல்கலைக்கழகம் - சுதேச மருத்துவ நிறுவனம்
5. பெரடேனியா பல்கலைக்கழகம்
6. களனியா பல்கலைக்கழகம்
7. விக்ரமராச்சி ஆயுர்வேத நிறுவனம், கம்பா
8. ஸ்ரீ ஜெயவர்தனபுரா பல்கலைக்கழகம்
9. மொரட்டுவ பல்கலைக்கழகம்
10. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
11. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் - ராமநாதன் அகாடமி
12. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் - வவுனியா வளாகம்
13. ருஹுனா பல்கலைக்கழகம்
14. கிழக்கு பல்கலைக்கழகம்
15. கிழக்கு பல்கலைக்கழகம் - திருகோணமலை வளாகம்
16. கிழக்கு பல்கலைக்கழகம் - சுவாமி விபுலானந்தா கலா பெவிலியன்
17. மூலதன பல்கலைக்கழகம்
18. ராஜரதா பல்கலைக்கழகம்
19. சபராகமுவ பல்கலைக்கழகம்
20. வடமேற்கு பல்கலைக்கழகம்
21. உவா வெல்லாசா பல்கலைக்கழகம்
22. பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்தார்

மகாபோலா உதவித்தொகை வழங்கும் உயர் கல்வி நிறுவனங்கள்


1. ப and த்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்
2. புத்த ஸ்ரவாகா பிக்கு பல்கலைக்கழகம்
3. இலங்கையின் சட்டக் கல்லூரி
4. தேசிய தொழில்நுட்ப நிறுவனம், மொரட்டுவா
5. தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம்
6. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

இலங்கை மேம்பட்ட தொழில்நுட்ப கல்வி நிறுவனம்

1. தொழில்நுட்பக் கல்லூரி - அனுராதபுரம்
2. தொழில்நுட்பக் கல்லூரி - அம்பாரா
3. தொழில்நுட்பக் கல்லூரி - மட்டக்களப்பு
4. தொழில்நுட்பக் கல்லூரி - பதுல்லா
5. தொழில்நுட்பக் கல்லூரி - தேஹிவாலா
6. தொழில்நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்
7. தொழில்நுட்பக் கல்லூரி - கண்டி
8. தொழில்நுட்பக் கல்லூரி - கெகல்லே
9. தொழில்நுட்பக் கல்லூரி - குருநாகல்
10. தொழில்நுட்பக் கல்லூரி - லாபதுவா
11. தொழில்நுட்பக் கல்லூரி - மட்டக்குலியா
12. தொழில்நுட்பக் கல்லூரி - நைவாலா
13. தொழில்நுட்பக் கல்லூரி - சமந்துரை
14. தொழில்நுட்பக் கல்லூரி - திருகோணமலை
15. தொழில்நுட்பக் கல்லூரி - தங்கல்லே
16. தொழில்நுட்பக் கல்லூரி - ரத்னபுரா
17. தொழில்நுட்பக் கல்லூரி - வவுனியா
18. தொழில்நுட்பக் கல்லூரி - நவலப்பிட்டியா
19. தொழில்நுட்பக் கல்லூரி - மன்னார்

# மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம்

## நிறுவனக் கட்டமைப்பு




### ஆளணி

| வகை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போது பணியிலீடுபட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 01 | 01 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 06 | 02 | 04 |
| மூன்றாம் நிலை மட்டம் | 19 | 08 | 11 |
| முன்னுரிமை | 05 | 02 | 03 |

# மூலோபாயத் திட்டத்தின் பயனர்களுக்கான வழிகாட்டி

## மூலோபாயத் திட்டத்தின் பயனர்களுக்கான வழிகாட்டி

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் மூலோபாயத் திட்டத்தை தயாரிக்கும்போது நிதியத்தின் நோக்கக் கூற்று மற்றும் செயற் பணிக் கூற்று என்பன அடிப்படையாகக் கொள்ளப்படுவதுடன் இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் அந்த தூர நோக்கு மற்றும் செயற் பணியின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மஹபொல நம்பிக்கை நிதியத்தின அபிலாஷைகள் நோக்கக் கூற்று ஊடாக வெளிப்படுத்தப்படுவதுடன் செயற் பணிக் கூற்று ஊடாக சுரக்கமாக நம்பிக்கை நிதியம் எந்த நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டதெனவும் அதன் செயற்பாட்டின் ஊடாக அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படும் விடயம் என்னவெனவும் தெளிவாக எடுத்தியம்பப்படுகின்றது.

பெறுமதிகள் மற்றும் மூலோபாயத் திட்டத்தை செயற்படுத்துவோர் சம்பந்தமாக இரண்டாம் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பகுதி மூலோபாயத் திட்டத்தின் துணைக் கூறுகளாக கருதப்படும். அதனூடாக உள்ளடக்கத்திற்கான அடித்தளம் சழங்கப்படுவதுடன், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைக்கு வழிகாட்டுகின்றது. மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நிறுவனம் சார்ந்த கலாசாரம் மற்றும் அதன் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனம் எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்கின்றதென பெறுமதிகள் ஊடாக விபரிக்கப்படுவதுடன் மூலோபாயத்தை செயற்படுத்துவோர் ஊடாக மூலோபாயத்தை விளைதிறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்தி நிறைவு செய்வதற்கான பலம்மிக்க வினைத்திறன் சார்ந்த பிணைப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

இந்த மூலோபாயத் திட்டத்தின் மூன்றாம் பகுதியில் இலக்குகள், நோக்கங்கள் மற்றும் தலைமை செயலாற்றுகை குறிகாட்டிகள் உள்ளடக்கப்படுகின்றன. இலக்குகள் (goals) மற்றும் நோக்கங்கள் (objectives) எனப் பயன்படுத்தப்படும் இரண்டு வசனங்கள் தொடர்பாக சிக்கல் நிலவுவதற்கான காரணம் அநேகமானோர் இந்த இரண்டு வசனங்களையும் மாற்றிப் பயன்படுத்துவதனாலாகும். எனவே, திட்டமிடல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரும் இணங்கும் பிரகாரம் பொது இணக்கப்பாடு என்னவெனில், இந்த இரண்டு வசனங்களையும் பயன்படுத்த முடியுமான பொருள்கூறல் வரிசைக் கிரமமாகும். இங்கு மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் அடைந்துகொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் மூலோபாய இலக்குகள் அல்லது நீண்டகால அனுகூலங்களை இலக்குகள் (goals) எனக் கருதப்படும். மூலோபாய இலக்குகளை அடைந்துகொள்வதற்கான விபரமான இடைக் காலம் முதல் நீண்ட கால இடைவெளியில் பயணிக்கும் நோக்கங்கள் (objectives) எனக் கருதப்படும்.

நோக்கங்களுடன் தொடர்பான பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள் ஊடாக தனிச் சிறப்பான இலக்குகள் ஊடாக மஹபொல நம்பிக்கை நிதியத்தின் தூர நோக்கினை அடைந்துகொள்வதன் முன்னேற்றம் மற்றும் வெற்றியை மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறை வழங்கப்படுகின்றது.

அடுத்த பகுதி ஊடாக தூர நோக்கு, செயற்பணி, பெறுமதிகள், இலக்குகள், நோக்கங்கள் மற்றும் 2020 - 2025 மூலோபாயத் திட்டம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றது. அதில் உள்ளடக்கப்படும் பகுதிகளை பிரகடனப்படுத்துவதற்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அங்கீகாரம் அவசியமாவதுடன் உயர் கல்வித் துறையின் பல்வேறு தரப்பினரிடையே இந்த ஆவணம் பொது ஆவணமாக பயன்படுத்தப்படுகின்றது. கீழ் குறிப்பிடப்படும் காரணங்களின் அடிப்படையில் இங்கு உள்ளடக்கப்படாவிடினும் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டினுள் முக்கிய அலுவலை செயற்படுத்தல் திட்டத்தின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றது.

## செயல் திட்டம்

பிரகடனப்படுத்தப்படும் இலக்குகள், நோக்கங்கள் மற்றும் பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளை செயற்படுத்துதல் செயல் திட்டத்தின் நோக்கமாகும். மூலோபாயத் திட்டத்தின் ஊடாக மஹபால நம்பிக்கை நிதியத்தின் ஒவ்வொரு பிரிவிலும் செயற்படுத்த முடியுமான செயல் திட்டத்தில் வழிகாட்டி என்னவெனில், மூலோபாய (உபாய வழி) இலக்குகள் மற்றும் நோக்கங்களாகும். செயல் திட்டத்தில் நீண்ட கால ரீதியில் கவனம் செலுத்தப்படும் விடயங்கள் என்னவெனில், காணப்படும் வளங்களைக் கவனத்திற்கொண்டு உரிய அலுவலை நிறைவேற்றிக்கொள்வதாகும்.

செயல் திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ள மூலோபாயத் திட்ட ஆவணத்தில் இந்தப் பகுதி பொதுப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்திக்கொள்ளப்படாத மஹபொல நம்பிக்கை நிதியத்தின் மிக முக்கியமான உள்ளக ஆவணமாகக் கருதப்படும். இதற்கான பிரதான காரணம் என்னவெனில், செயல் திட்டம் என்பது குறுகிய காலத் திட்டமாகும். (ஒரு வருடத்திலும் குறைந்த காலப் பகுதிக்காக மாதாந்த அடிப்படையிலாகும்.)

இது வருடாந்த அடிப்படையில் அறிக்கைப்படுத்தப்படுவதுடன் அலுவல் சூழலில் நிலவும் பாரம்பரியத் தன்மைகளுக்கு பதில் அளிப்பதற்கு மற்றும் இயைபடைவதற்கு நிதமும் மாற்றத்திற்கு அல்லது திருத்தங்களுக்கு உட்பட்டதாக இருக்கும்.

மூலோபாயத் திட்ட செயற்பாட்டு அலுவல்களாக மாற்றப்படும் செயற்பாட்டின் வெற்றியை உறுதி செய்வதற்காக இந்த செயல் திட்டம் நேரடிய மற்றும் தெளிவான வகையில் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் ஒதுக்கப்பட்ட ஆவணமொன்றாக தயாரிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு தனிச் சிறப்பான அலுவலையும் நிறைவு செய்வதற்கான திகதியொன்றை தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், அதற்குப் பொறுப்புக்கூறும் ஒருவரையும் நியமித்தல் வேண்டும். ஏதேனும் அலுவலுக்காக ஒரு பிரிவில் அநேகமானோர் தொடர்புபட்டாலும் அவ்வாறான ஒவ்வொரு அலுவலையும் நிறைவு செய்யும் அலுவலை மேற்பார்வை செய்வதற்காக அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட ஒருவரை நியமனம் செய்தல் புத்திசாதுர்யமான நடவடிக்கையாகும்.

மூலோபாயத் திட்டம் சுருக்கமாக...

| | இலக்குகள் | நோக்கங்கள் | பிரதான செயலாற்றுகை குறிகாட்டி | செயல் திட்டம் |
|---|---|---|---|---|
| எமது தூர நோக்கு மற்றும் செயற்பணி | இலக்கு 1 | நோக்கம் 01 – 05 | 01 ஆவது இலக்கிற்கான செயலாற்றுகை குறிகாட்டி | வருடாந்த செயல் திட்டம் |
| | இலக்கு 2 | நோக்கம் 01 – 03 | 02 ஆவது இலக்கிற்கான செயலாற்றுகை குறிகாட்டி | |
| | இலக்கு 3 | நோக்கம் 01 – 03 | 03 ஆவது இலக்கிற்கான செயலாற்றுகை குறிகாட்டி | |
| பெறுமதிகள் மற்றும் மூலோபாயத் திட்டத்தினை செயற்படுத்துவோர் | இலக்கு 4 | நோக்கம் 01 – 04 | 04 ஆவது இலக்கிற்கான செயலாற்றுகை குறிகாட்டி | |
| | இலக்கு 5 | நோக்கம் 01 – 02 | 05 ஆவது இலக்கிற்கான செயலாற்றுகை குறிகாட்டி | |
| | இலக்கு 6 | நோக்கம் 01 – 03 | 06 ஆவது இலக்கிற்கான செயலாற்றுகை குறிகாட்டி | |

# தூர நோக்கு

வறுமையை ஒழித்தலை இலக்காகக் கொண்ட கற்ற சமூகமொன்றை தோற்றுவித்தல்

# செயற் பணி

சலுகைகளைப் பெற்றிராத இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக புலமைப் பரிசில் வழங்குதல் மற்றும் உயர் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக சம வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.

# எமது பெறுமதிகள்

எமது செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பது எதற்காக? மற்றும் எவ்வாறு? என்பதனை மஹபொல உட்பொருள் பெறுமதி ஊடாக தெளிவுபடுத்தப்படுகின்றது. மேலும், இலங்கையில் செயற்படுத்தப்படும் சுயாதீன நிதியமொன்று என்ற வகையில் பேணிவரப்படும் இந்த நிதியம் நிறுவன ரீதியான கலாசாரத்தினுள் மிகச் சிறந்த அடையாளமொன்றாக நிலவுவதும் அதனூடாக வெளிப்படுத்தப்படுவதுடன் எமது தூர நோக்கு, இலக்குகள் மற்றும் அதனுடன் இணைந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வழிகாட்டலை வழங்கும் கொள்கையும் அதனூடாக வழங்கப்படுகின்றது.

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் இனங்காணப்பட்ட உட்பொருட் பெறுமதி என்னவெனில்,

- **நேர்மை**

  மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசிலுக்காக மாணவர்களைத் தெரிவு செய்யும்போது நாம் நியாயமான வகையில் வெளிப்படைத் தன்மையுடன் நிச்சயிக்கப்பட்ட முறையொன்றைப் பின்பற்றுவதுடன் தகைமை பெறும் மாணவர்களுக்கு மஹபொல புலமைப் பரிசில் தொகையை நியாயமான காலப் பகுதிக்காக பெற்றுக்கொடுப்பதற்கு நிதமும் முயற்சிக்கின்றோம்.

- **உடன்பாட்டு மனப்பாங்கு**

  புலமைப் பரிசிலை வழங்கும்போது ஏனைய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும்போது மற்றும் நிதியை ஏற்பாடு செய்துகொள்ளும்போது பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுவதுடன், அந்த அனைத்து சவால்களுக்கும் சிறப்பான வகையில் முகங்கொடுப்பதற்காக ஆளணி அங்கத்தவர்கள் அர்ப்பணிப்புடன் அலுவல் மேற்கொள்கின்றனர்.

- சிறந்த பெறுபேறு

தனது கடமை சம்பந்தமாக மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் ஆளணி அங்கத்தவர்களிடையே சிறப்பான புரிந்துணர்வு நிலவுவதுடன் திட்டமிடப்பட்ட இலக்குகளை வினைத்திறன்மிக்க வகையில் நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் நிதமும் முயற்சிக்கின்றனர். மாதாந்தம் சுமார் 7,000 எண்ணிக்கையினரான புலமைப் பரிசில்களுடன் தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஒரு சிறிய ஆளணியினருக்கு (13 ஊழியர்களுக்கு) முடியுமாகவுள்ளது.

- நெகிழ்வுத் தன்மை

ஊழியர்கள் மற்றும் பணிப்பாளர் உட்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் நிதியத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய கருத்துக்களை உள்வாங்கி போட்டித் தன்மை வாய்ந்த நிதிச் சந்தையில் சிறப்பான வகையில் முன்னேறி வருகின்றது.

- குழு உணர்வு

வெளிப்படைத்தன்மை, நட்புறவு, தனி நபர் விருத்தி போன்ற பண்புகளுடன் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்கள் நிறுவனத்தின் இலக்குகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக ஒற்றுமையாக நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

- சிறப்புத் தேர்ச்சி

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் உயர் சேவைத் தரத்தை தொடர்ச்சியாக பேணி வருவதற்காக அதன் ஆளணி அங்கத்தவர்கள் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

## *1 ஆவது இலக்கு*

*"உயர் கல்விக்காக நிலவும் வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் குறைந்த வரப்பிரசாதங்களைக் கொண்டவர்கள் மற்றும் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்து கொள்வதற்கான ஆர்வத்தைக் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு நிதிசார் உதவியைப் பெற்றுக் கொடுத்தல்"*

## *2 ஆவது இலக்கு*

*"மஹபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் நிதியின் அளவை அதிகரித்தல் மற்றும் தற்போது நிலவும் நிதியத்தை 2025 ஆம் ஆண்டாகும்போது இரு மடங்காக அதிகரிப்பதனூடாக எதிர்வரும் 10 வருடங்களுக்கு நிதியத்தைப் பலப்படுத்தல்"*

## *3 ஆவது இலக்கு*

*"இலங்கையின் தகவல் தொழில்நுட்பக் கல்வியறிவை விருத்தி செய்வதற்கு பங்களிப்பை வழங்குதல்"*

## *4 ஆவது இலக்கு*

*"க.பொ.த (உ.த) பரீட்சையில் உயர் சித்தியைப் பெற்றுக்கொள்ளும் ஆனாலும் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளாத இளைஞர் யுவதிகளின் உயர் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் மற்றும் வசதிகளை விரிவுபடுத்தல் "*

## *5 ஆவது இலக்கு*

*"பிரதேச ரீதியாக நிலவும் இரண்டாம் நிலை பாடசாலைகளை மிகவும் உயர் நிலைமைக்கு மேம்படுத்தல் மற்றும் அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஊடாக பகுதி - நகர ரீதியாக மற்றும் கிராமங்களில் வாழும் மாணவர்களுக்கு தரமான பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நகர்ப்புற பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்காக நிலவும் போட்டியைக் குறைத்தல்"*

## *6 ஆவது இலக்கு*

*"உயர் தரம் மற்றும் சாதாரண தர மாணவர்களின் மொழித் திறமைகளை மேம்படுத்துவதற்கான வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்."*

I ஆம் இலக்கு உயர் கல்விக்காக நிலவும் வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் குறைந்த வரப்பிரசாதங்களைக் கொண்டவர்கள் மற்றும் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்து கொள்வதற்கான ஆர்வத்தைக் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு நிதிசார் உதவியைப் பெற்றுக் கொடுத்தல்"

தொழிலாளர் வர்க்கத்தினருக்கு அரச தறையில் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பற்காக நிலவும் வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த இளைஞர் யுவதிகளுக்காக மஹபொல நம்பிக்கை நிதியம் ஊடாக நிதிசார் வசதிகளைப் பெற்றுக்கொடுக்க முடியுமாயின் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகளாக சமூகத்துடன் இணைந்து செல்வதற்கு அவர்களுக்கு முடியுமாக இருப்பதுடன் சிறப்பான வகையில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் பங்களிப்பைச் செலுத்துவதற்கு அவர்களால் முடியுமாக இருக்கும்.

## I ஆவது இலக்கின் நோக்கங்கள்

(1) மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமை பெறும் அனைத்து மாணவர்களுக்கும் மஹபொல புலமைப் பரிசிலை வழங்குதல்.

(2) தற்போது கவனத்திற் கொள்ளப்படும் பெற்றோரின் வருடாந்த வருமானம் ரூ. 500,000/- ஆக இருப்பதுடன் அந்த வரையறையை ரூ.700,000/- வரை அதிகரிப்பதனூடாக அரச துறை மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளில் பணியாற்றுபவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் புலமைப் பரிசிலை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(3) தற்போது வழங்கப்படும் ரூ. 5,000/- மாதாந்த புலமைப் பரிசில் தொகையை 2020 ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில் ரூ.7,500/- வரை அதிகரித்தல்.

(4) வங்கிக் கடனட்டை முறை ஊடாக அனைத்து மாணவர்களுக்கும் ரூ.10,000/- வரையறைக்குட்பட்ட வகையில் மாதாந்த கடன் வசதியை அறிமுகஞ் செய்தல். இந்தத் திட்டம் இலங்கை வங்கி / மக்கள் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும். மஹபொல புலமைப் பரிசில் நிதியத்தின் ஊடாக மஹபொல புலமைப் பரிசில் நிதியத்தினால் இந்தத் திட்டம் ஒருங்கிணைப்புச் செய்யப்படும். கடன் தொகை தன்னியக்க ரீதியில் சீர்படுத்தப்படும். மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்கும் இந்த கடன் வசதிக்கான கோரிக்கையை விடுக்க முடியும்.

(5) கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு புதிய புலமைப் பரிசில் முறையொன்றை அறிமுகஞ் செய்தல்.

(6) வளர்ப்புப் பெற்றோர் புலமைப் பரிசில் முறையொன்றை அறிமுகஞ் செய்தல் மற்றும் புலமைப் பரிசிலுக்கு அனுசரணை வழங்குவதற்கு விருப்பம் தெரிவிக்கும் அரச / தனியார் நிறுவனங்களுக்காக இதனை ஆரம்பித்தல் மற்றும் புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்களைப் பெயர் குறிப்பிடுவதற்கான வாய்ப்பை வழங்க முடியுமாக இருத்தல்.

(7) உயர் கல்விக்கான கடன் திட்டம் - இலங்கை வங்கி / மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவை மஹபொல நம்பிக்கை நிதியத்துடன் இணைந்து ஒரு மில்லியன் ரூபா வரையான கடன் திட்டமொன்றை ஆரம்பித்தல். இதற்காக கடன் சலுகைக் காலம் 04 வருடங்களாக இருப்பதுடன் தொழிலொன்றில் (உள்நாட்டு அல்லது வெளிநாட்டு) ஈடுபட ஆரம்பித்ததன் பின்னர் மாத்திரம் கடனைச் மீளச் செலுத்துதல் ஆரம்பிக்கப்படும்.

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி - 1 ஆவது இலக்கின் நோக்கங்கள்

| நோக்கம் | | பிரதான செயலாற்றுகை குறிகாட்டி | ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
| 1 | 1.1 | புலமைப் பரிசிலின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் பொதுவான ஆட்சேர்ப்பின்போது புலமைப் பரிசில் கிடைக்காத மாணவர்களுக்கும் புலமைப் பரிசில் வழங்குதல் | (15,000) 55% | (16.500) 60% | (17,875) 65% | (19,250) 70% | (22,000) 80% | (27,500) 115% |
| | 1.2 | வளர்ப்புப் பெற்றோர் புலமைப் பரிசில் திட்டமொன்றை தாபித்தல், புலமைப் பரிசிலுக்குரியவர்கள் பிரேரிக்கும் நபர்கள் ஊடாக புலமைப் பரிசிலை வழங்குபவர்களை சேர்த்துக்கொள்ளல். | 2% | 2% | 3% | 3% | 4% | 5% |
| | 1.3 | தனியார் துறையில் தெரிவு செய்யப்பட்ட துறைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளுக்கு புலமைப் பரிசிலை வழங்குதல். | 3% | 3% | 2% | 2% | 6% | 15% |
| | 1.4 | ஆன்லைன் செலுத்தல் முறையை அறிமுகஞ் செய்து சர்வதேச மற்றும் உள்நாட்டு உதவிகளை அதிகரித்துக்கொள்ளல். | 15% | 50% | 60% | 100% | 100% | 100% |
| | 1.5 | NWCL / NWSL இல் முதலீடு செய்யப்பட்டுள்ள மஹபொல நிதியத்தை மறுசீரமைத்தல் மற்றும் அவை முதிர்ச்சியடையும்போது கிடைக்கப்பெறும் மேலதிக வருமானத்தை புதிய முதலீடுகளில் முதலீடு செய்தல். | ரூ. (மில்.) 200 | ரூ. (மில்.) 300 | ரூ. (மில்.) 400 | ரூ. (மில்.) 500 | ரூ. (மில்.) 500 | ரூ. (மில்.) 500 |
| | 1.6 | வெளிநாடொன்றில் இருந்து குறைந்த வட்டி வீதத்தின் கீழ் கடன் தொகையொன்றைப் பெற்று உள்நாட்டு மூலமொன்றில் அந்தக் கடன் தொகையை மீள் - முதலீடு செய்தல் மற்றும் அதனூடாக மேலதிக வருமானமொன்றைப் பெற்றுக்கொள்ளல். இவ்வாறு கடனைப் பெற்றுக்கொள்ளும்போது 4 வருட கடன் சலுகைக் காலம் மற்றும் மீளச் செலுத்து 15 வருடங்களைக் கோருதல். | ரூ. (மில்.) 400 | ரூ. (மில்.) 400 | ரூ. (மில்.) 400 | ரூ. (மில்.) 400 | ரூ. (மில்.) 400 | ரூ. (மில்.) 400 |
| 2 | 2.1 | கவனத்திற்கொள்ளப்படும் வருடாந்த குடும்ப வருமான மட்டத்தை ரூ. 750,000 வரை அதிகரித்து அரசாங்க ஊழியர்களின் மற்றும் முப்படையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசிலை வழங்குதல். | 1000 | 2000 | 2000 | 3000 | 4000 | 5000 |
| 3 | 3.1 | புலமைப் பரிசில் மாதாந்த தொகையை 7,000/- வரை அதிகரிப்பதற்கு தேவையான மேலதிக நிதி | ரூ. (மில்.) (1100) | ரூ. (மில்.) (1220) | ரூ. (மில்.) (1320) | ரூ. (மில்.) (1400) | ரூ. (மில்.) (1500) | ரூ. (மில்.) (1500) |
| 4 | 4.1 | அனைத்து புலமைப் பரிசில் பெறுபவர்களுக்கும் வழங்கும் ரூ. 2,000/- மேலதிக கடன் தொகைக்கான வட்டியைச் செலுத்துவதனை மஹபொல நம்பிக்கை நிதியம் ஏற்றுக்கொள்ளல். | ரூ. (மில்.) (132) | ரூ. (மில்.) (135.6) | ரூ. (மில்.) (138.9) | ரூ. (மில்.) (164.2) | ரூ. (மில்.) (181.5) | ரூ. (மில்.) (207.9) |
| 5 | 5.1 | தனியார் துறையில் தேரிவு செய்யப்பட்ட துறைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளுக்கு புலமைப் பரிசிலை வழங்குதல். | 2% | 5% | 10% | 15% | 20% | 25% |

**II ஆவது இலக்கு** மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் நிதியை அதிகரித்துக்கொள்ளுதல் மற்றும் தற்போது நிலவும் நிதியத்தை 2025 ஆம் ஆண்டாகும்போது இரு மடங்காக அதிகரிப்பதனூடாக எதிர்வரும் 10 வருடங்களுக்கு நிதியத்தைப் பலப்படுத்தல்.

## II ஆவது இலக்கின் நோக்கங்கள்

1. 2025 ஆம் ஆண்டில் நிதியத்தின் முதலீட்டுச் சொத்துக்களை இரு மடங்காக அதிகரித்தல், அதாவது 10 பில்லியன் ரூபாவிலிருந்து 20 பில்லியன் ரூபா வரை அதிகரித்தல். குறைந்த வருமானம் பெறும் இளைஞர் யுவதிகளுக்கு நிலவும் வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் இந்த அதிகரிப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.
2. மஹபொல புலமைப் பரிசிலொன்றுக்கான ரூ. 2,450/- பெறுமதிமிக்க திறைசேரிப் பங்களிப்பை குறைத்தல் மற்றும் நிதியத்தின் ஆண்டு வருமானத்தை அதிகரித்தல் ஊடாக மொத்த புலமைப் பரிசில் தவணைத் தொகையையும் (ரூ.5,000/-) மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஊடாக செலுத்தல்.
3. 2025 ஆம் ஆண்டாகும்போது தற்போது வெளிநாடுகளில் இருக்கும் முன்னைய புலமைப் பரிசில் பெற்றவர்களின் 03 அமைப்புக்களை தாபித்தல்.

**பிரதான செயலாற்றுகை குறிகாட்டி - II ஆவது இலக்கின் நோக்கங்கள்**

| நோக்கம் | | பிரதான செயலாற்றுகை குறிகாட்டி | ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
| | | | (ரூ.மில்.) | (ரூ.மில்.) | (ரூ.மில்.) | (ரூ.மில்.) | (ரூ.மில்.) | (ரூ.மில்.) |
| 1 | 1.1 | நிதியத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய முதலீட்டு முறைகளை இனங்காணல், அரசாங்க பாதுகாப்புப் பத்திரங்களில் (100% அரசுக்குச் சொந்தமான) முதலீடு செய்தல். அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை வங்கிகளில் 10%ஐ முதலீடு செய்தல் எதிர்பார்க்கப்படும் மேலதிக வருமானம் | 400 | 500 | 600 | 700 | 800 | 1000 |
| | 1.2 | மஹபொல நிதியத்தின் ஊடாக புதிய ஆன்லைன் லொத்தர் ஒன்றை அறிமுகஞ் செய்தல் எதிர்பார்க்கப்படும் மேலதிக வருமானம் | 500 | 500 | 500 | 750 | 1000 | 1000 |
| | 1.3 | மஹபொல நிதியத்திற்காக நிதியுதவி செய்பவர்களை தைரியப்படுத்துவதற்கான செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல் (வெளிநாட்டு, உள்நாட்டு) எதிர்பார்க்கப்படும் மேலதிக வருமானம் | 200 | 300 | 400 | 500 | 500 | 500 |
| | 1.4 | மஹபொல நிதியத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் (மூலதனச் செலவுக்கான முதலீடாக வாடகையை கவனத்திற்கொள்ளல்) எதிர்பார்க்கப்படும் மேலதிக வருமானம் | 200 | 300 | 300 | 300 | 300 | 300 |
| 2 | 2.1 | திறைசேரியினால் ஏற்கப்படும் ரூ.2,450/- புலமைப் பரிசில் செலவைக் குறைப்பதற்காக மஹபொல நிதியத்தை பலப்படுத்தல் மற்றும் ஒரு மாணவனுக்காக 1,000/- மேலதிக நிதியை வழங்குதல். | (550) | (565) | (590) | (600) | (700) | (800) |
| 3 | 3.1 | இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளின் அமைப்புக்களின் ஊடாக உதவிகளை சேகரித்தல். | 200 | 200 | 300 | 500 | 500 | 500 |

**III ஆவது இலக்கு** இலங்கையின் தகவல் தொழில்நுட்பக் கல்வியறிவை விருத்தி செய்வதற்கு பங்களிப்பை வழங்குதல்

## III ஆவது இலக்கின் நோக்கங்கள்

மஹபொல நம்பிக்கை நிதியத்தினூடாக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (SLIIT) செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

**பிரதான செயலாற்றுகை குறிகாட்டி - III ஆவது இலக்கின் நோக்கங்கள்**

| நோக்கம் | | பிரதான செயலாற்றுகை குறிகாட்டி | ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
| 1 | 1.1 | இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் கிளைகளை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பித்தல். நகர்ப்புற மற்றும் கிராமப்புற பிரதேசங்களில் வாழும் மாணவர்களின் கணனி அறிவை அதிகரித்தல் மற்றும் நியாயமான கட்டணத்தின் கீழ் அந்த வசதிகளை வழங்குதல் | | | | | | |
| | | மேலுள்ள கருத் திட்டத்திற்கான செலவு | (ரு.மில்.) 100 | (ரு.மில்.) 100 | (ரு.மில்.) 200 | (ரு.மில்.) 200 | (ரு.மில்.) 300 | (ரு.மில்.) 300 |
| | | கணனி அறிவு மேம்பாடு | 5% | 10% | 15% | 20% | 25% | 50% |
| | 1.2 | இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் இலாபப் பங்குகள் ஊடாக தேவையான நிதி பெற்றுக்கொள்ளப்படும். | (ரு.மில்.) 100 | (ரு.மில்.) 100 | (ரு.மில்.) 200 | (ரு.மில்.) 200 | (ரு.மில்.) 300 | (ரு.மில்.) 300 |

**IV ஆவது இலக்கு** க.பொ.த (உ.த) பரீட்சையில் உயர் சித்தியைப் பெற்றுக்கொள்ளும் ஆனாலும் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளாத இளைஞர் யுவதிகளின் உயர் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் மற்றும் வசதிகளை விரிவுபடுத்தல்

## IV ஆவது இலக்கின் நோக்கங்கள்

1. வெளிநாட்டுப் பல்கலைக்கழமொன்றுடன் இணைந்த மருத்துவ பீடமொன்றை அமைத்தல்.
2. மொழி ஆய்வுக்கான பல்கலைக்கழகமொன்றை அமைத்தல்.
3. இரத்மலானையில் அமைந்துள்ள லலித் அத்துலத்முதலி தொழில் பயிற்சி நிலையத்தை பல்கலைக்கழகமொன்றாக மாற்றியமைத்தல் மற்றும் அதன் வசதிகளை மேம்படுத்தல்.
4. க.பொ.த உயர் தரம் சித்தியடையும் மாணவர்களுக்கு தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டத்தைப் பயிலுவதற்கு முடியுமான வகையில் கடன் திட்டமொன்றை ஆரம்பித்தல்.
5. இலங்கையில் சகல தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகளை ஆரம்பித்தல் மற்றும் அதனூடாக சேகரிக்கப்படும் மேலதிக நிதியை அந்த நிறுவகங்களின் வசதிகளை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தல்.

## பிரதான செயலாற்றுகை குறிகாட்டி - IV ஆவது இலக்கின் நோக்கங்கள்

| நோக்கம் | | பிரதான செயலாற்றுகை குறிகாட்டி | ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
| 1 | 1.1 | மருத்துவ பீடமொன்றை தாபித்தல் மற்றும் நியாயமான கட்டணத்தின் கீழ் மருத்துவப் பட்டப் படிப்பை மேற்கொள்ளல். | - | - | (ரூ.மில்.) 100 | (ரூ.மில்.) 200 | (ரூ.மில்.) 200 | (ரூ.மில்.) 200 |
| | 1.2 | அந்த மருத்துவ மாணவர்களுக்கு பயிற்சியைப் பெற்றுக்கொடுப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மருத்துவமனைகளின் உதவியைப் பெற்றுக்கொள்ளல். இந்த வாய்ப்பு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுவதுடன் மஹபொல நிதியம் தனியார் நிறுவனமொன்றுடன் கூட்டுப் பங்காண்மையாகும். (அரச - தனியார் கூட்டுப் பங்காண்மை முறை) மூலதனச் செலவினத்தின் 50% இனை மஹபொல நிதியம் ஏற்பதுடன் மீதி 50% செலவை தனியார் நிறுவனம் ஏற்றல் வேண்டும். | (ரூ.மில்.) 200 | (ரூ.மில்.) 300 | (ரூ.மில்.) 300 | (ரூ.மில்.) 400 | (ரூ.மில்.) 200 | (ரூ.மில்.) 500 |
| | 1.3 | கண்டி அல்லது நுவரெலியா மாவட்டத்தில் இந்த மருத்துவ பீடத்தை அமைப்பதற்கு பிரேரிக்கப்படுகின்றது. | 5% | 10% | 30% | 50% | 100% | |
| | 1.4 | பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்யும் அலுவலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மேற்கொள்வதுடன், Z-score முறை ஊடாக மருத்துவ பீடங்களுக்கு தெரிவு செய்யப்படாத மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்<br>- உள்நாட்டு<br>- வெளிநாட்டு | -<br>- | -<br>- | 100<br>20 | 200<br>30 | 300<br>50 | 300<br>100 |
| | 1.5 | தேவைப்பாட்டைக் கொண்ட மாணவர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல் | - | - | (ரூ.மில்.) 50 | (ரூ.மில்.) 100 | (ரூ.மில்.) 150 | (ரூ.மில்.) 200 |
| 2 | 2.1 | வெளிநாட்டு மொழிகள் கற்கைகளுக்காக பல்கலைக்கழகமொன்றை தாபித்தல்.<br>செலவுகள்<br>ஆட்சேர்ப்புக்கள் | (ரூ.மில்.)<br>100<br>400 | (ரூ.மில்.)<br>300<br>600 | (ரூ.மில்.)<br>200<br>1500 | (ரூ.மில்.)<br>100<br>3000 | (ரூ.மில்.)<br>100<br>4000 | (ரூ.மில்.)<br>100<br>5000 |
| 3 | 3.1 | கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகளை அறிமுகஞ் செய்தல் மற்றும் அதனூடாக மேலதிக வருமானத்தை உழைத்தல். குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குதல். | (ரூ.மில்.)<br>10<br>- | (ரூ.மில்.)<br>20<br>- | (ரூ.மில்.)<br>30<br>(20) | (ரூ.மில்.)<br>50<br>(50) | (ரூ.மில்.)<br>100<br>(100) | (ரூ.மில்.)<br>200<br>(100) |
| 4 | 4.1 | அரசாங்க வங்கிகளுடன் இணக்கப்பாட்டுடன் கடன் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதற்குத் தேவையான காப்பீட்டை மஹபொல நிதியத்தின் ஊடாக வழங்குதல். மீளச் செலுத்துவதற்கான காலப் பகுதி 05 வருடங்களாகும். | - | - | - | - | - | - |
| 5 | 5.1 | கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள் ஊடாக கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி தேவைப்பாடுகளைக் கொண்ட மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குதல். | - | (ரூ.மில்.) 50 | (ரூ.மில்.) 100 | (ரூ.மில்.) 100 | (ரூ.மில்.) 100 | (ரூ.மில்.) 200 |

**V ஆவது இலக்கு** பிரதேச ரீதியாக நிலவும் இரண்டாம் நிலை பாடசாலைகளை மிகவும் உயர் நிலைமைக்கு மேம்படுத்தல் மற்றும் அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஊடாக பகுதி - நகர ரீதியாக மற்றும் கிராமங்களில் வாழும் மாணவர்களுக்கு தரமான பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நகர்ப்புற பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்காக நிலவும் போட்டியைக் குறைத்தல்

## V ஆவது இலக்கின் நோக்கங்கள்

1. அனைத்துப் பல்கலைக்கழகங்களும் உள்ளடக்கப்படும் விதத்தில் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த தேசிய பாடசாலைகளை ஆரம்பித்தல்.

### பிரதான செயலாற்றுகை குறிகாட்டி - V ஆவது இலக்கின் நோக்கங்கள்

| நோக்கம் | | பிரதான செயலாற்றுகை குறிகாட்டி | ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
| 1 | 1.1 | அமைச்சின் ஒருங்கிணைப்புடன் மஹபொல புலமைப் பரிசில் நிதியம் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஊடாக இந்த அலுவலுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் | (ரூ.மில்.) 50 | (ரூ.மில்.) 100 | (ரூ.மில்.) 150 | (ரூ.மில்.) 200 | (ரூ.மில்.) 250 | (ரூ.மில்.) 300 |
| | 1.2 | இந்த ஒருங்கிணைப்பின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு கற்பதற்கு பல்கலைக்கழகமும் பாடசாலையும் தொடர்புபடுகின்றன. தேவைப்படும் பாடத் திட்டத்தை பாடசாலைக்குப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் மேலதிக வகுப்புக்களுக்கு மாணவர்கள் சேர்வதனைக் குறைத்தல். | 5% | 10% | 20% | 30% | 40% | 50% |
| | 1.3 | பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாட விதானத்தை மேம்படுத்தல் மற்றும் நகர்ப்புற பாடசாலைகளில் நிலவும் நெரிசலை நீக்குதல் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவ ஆற்றல் மற்றும் நபர்களுக்கிடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதற்கு வாய்ப்பினை வழங்குதல். | 10% | 20% | 30% | 40% | 50% | 60% |

**VI ஆவது இலக்கு** உயர் தரம் மற்றும் சாதாரண தர மாணவர்களின் மொழித் திறமைகளை மேம்படுத்துவதற்கான வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

## VI ஆவது இலக்கின் நோக்கங்கள்

1. அனைத்து மாவட்டங்களும் உள்ளடக்கப்படும் பிரகாரம் ஆங்கில மொழிக் கற்கைப் பிரிவுகளை தாபித்தல்

**பிரதான செயலாற்றுகை குறிகாட்டி - VI ஆவது இலக்கின் நோக்கங்கள்**

| நோக்கம் | | பிரதான செயலாற்றுகை குறிகாட்டி | ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
| 1 | 1.1 | ஆங்கில மொழியறிவை விருத்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். | 10% | 20% | 20% | 30% | 40% | 50% |
| | 1.2 | அதற்கமைய,ஆசிரியர்கள் மற்றும் உபகரணங்களுக்குச் செலவாகும் மேலதிக செலவை மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஊடாக மேற்கொள்வதுடன் செலவின் ஒரு பகுதியை மாத்திரம் மீள அறவிட்டுக்கொள்ளல். | (ரூ.மில்.) 20 | (ரூ.மில்.) 30 | (ரூ.மில்.) 50 | (ரூ.மில்.) 50 | (ரூ.மில்.) 100 | மில்.) 100 |
| | 1.3 | விசேட ஆங்கில மொழிப் பாடநெறியை அறிமுகஞ் செய்தல் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்ற விசேடமாக உயர் தரத்தில் சித்தியடைந்தவர்களுக்காக குறைந்தது 06 மாத காலப் பயிற்சியை பெற்றுக்கொடுத்தல். | 5% | 10% | 15% | 20% | 30% | 40% |

எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல் பகுப்பாய்வு

| | | 2020 ரூ.மில். | 2021 ரூ.மில். | 2022 ரூ.மில். | 2023 ரூ.மில். | 2024 ரூ.மில். | 2025 ரூ.மில். |
|---|---|---|---|---|---|---|---|
| எதிர்பார்க்கப்படும் வருமானம் | 1 ஆவது இலக்கு | 600 | 700 | 800 | 900 | 900 | 900 |
| | 2 ஆவது இலக்கு | 1500 | 1800 | 2400 | 3250 | 3600 | 3700 |
| | 3 ஆவது இலக்கு | 100 | 100 | 200 | 200 | 300 | 300 |
| | 4 ஆவது இலக்கு | 10 | 20 | 30 | 50 | 100 | 200 |
| | 5 ஆவது இலக்கு | - | - | - | - | - | - |
| | 6 ஆவது இலக்கு | - | - | - | - | - | - |
| | | **2210** | **2620** | **3430** | **4400** | **4900** | **5100** |
| | | | | | | | |
| எதிர்பார்க்கப்படும் செலவுகள் | 1 ஆவது இலக்கு | (1132) | (1355.6) | (1458.9) | (1538.9) | (1681.8) | (1707.9) |
| | 2 ஆவது இலக்கு | (550) | (565) | (590) | (600) | (700) | (800) |
| | 3 ஆவது இலக்கு | (100) | (100) | (200) | (200) | (300) | (300) |
| | 4 ஆவது இலக்கு | (250) | (350) | (400) | (500) | (300) | (600) |
| | 5 ஆவது இலக்கு | (50) | (100) | (150) | (200) | (250) | (300) |
| | 6 ஆவது இலக்கு | (20) | (30) | (50) | (50) | (100) | (100) |
| | | **(2102)** | **(2500.6)** | **(2848.9)** | **(3088.9)** | **(3331.8)** | **(3807.9)** |
| | | | | | | | |
| மேலதிகம் | | **108** | **119.4** | **581.1** | **1311.1** | **1568.2** | **1292.1** |

மூலோபாயத்திற்கான (உத்திகளுக்கான) செயலூக்கி

சிறப்பான வகையில் தாபிக்கப்பட்ட நிறுவனம் தனது மூலோபாயங்களை (உத்திகளை) வெற்றிகரமாக செயற்படுத்தல் ஊடாக தனது இலக்கை அடைந்துகொண்டுள்ளது. இந்த செயற்பாட்டிற்கு மூலோபாயத்திற்கான செயலூக்கி ஊடாக சிறப்பான உதவி கிடைக்கப் பெற்றுள்ளதுடன், விளைதிறன்மிக்க மூலோபாயங்களை(உத்திகளை) நடைமுறைப்படுத்துவதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது.

மஹபொல நம்பிக்கை நிதியம் தொடர்பாக கவனம் செலுத்தும்போது இலக்குகள் மற்றும் நோக்கங்கள் உள்ளடக்கப்படும் அதன் மூலோபாயங்கள் (உத்திகள்) பிரதான மூன்று செயலூக்கிகளின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றன. அவையாவன;

1. பலமான நிறுவனக் கட்டமைப்பு - நம்பிக்கை பொறுப்பாளர் சபையைக் கவனத்திற்கொள்ளும்போது அதன் அங்கத்தவர்களாக பதவிவழியில் அரசாங்க நிறுவனங்களில் உயர் பதவிகளை வகிப்பவர்களே நியமிக்கப்படுகின்றனர். இது நிறுவனத்தில் சாதகமான சூழல் உருவாகுவதற்கு துணைபுரிந்துள்ளது.

2. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளல், வினைத்திறன்மிக்க செயல்முறைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நிலவுதல்.

3. ஆளணி அங்கத்தவர்கள் அர்ப்பணிப்புடன் கருமமாற்றல். 13 ஊழியர்களைக்கொண்ட சிறியதொரு ஆளணியைக் கொண்டுள்ளபோதிலும் மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் ஒரு மாதத்தில் 70,000 இற்கும் அதிகமான புலமைப் பரிசில்களை செலுத்தலுடன் தொடர்பான அலுவல்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய அலுவல்களை நிறைவேற்றல்.

## நிறைவு

இந்த ஆவணத்தினூடாக மஹபொல நம்பிக்கை நிதியத்தின் எதிர்வரும் ஐந்தாண்டு காலத்திற்கான மூலோபாயத் திட்டம் முன்வைக்கப்படுகின்றது. அதனூடாக மூலோபாய ரீதியிலான செயல் திட்டமொன்று முன்வைக்கப்படுவதுடன் இலங்கையில் கற்றறிந்த சமூகமொன்றை தோற்றுவிப்பதன் நிமித்தம் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான உயர் கல்வித் தேவைக்காக பாடுபடும் குறைந்த வருமானத்தைக் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு நிதிசார் உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளும் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் ஆளணி மற்றும் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அமைப்பு வெளிப்படுத்தப்படுத்தப்படுகின்றது. எமது பிள்ளைகள் / மாணவர்களைப் போன்றே ஏனைய அனைத்து தரப்பினருக்கும் எமது பெறுமதிமிக்க முயற்சிக்கு தமது ஒத்துழைப்பை வழங்குவதற்காக போதுமானளவு தூண்டுதல் எமது நோக்கம் மற்றும் அபிலாஷைகள் ஊடாக வெளிப்படுத்தப்படுமென நம்புகின்றோம். எமது அர்ப்பணிப்பின் அடிப்படையிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது. நாம் பொறுப்பு மற்றும் பொறுப்புடைமை மூலோபாயங்களை செயற்படுத்தும் செயற்பாட்டின்போது நாம் ஒரு குழுவாக இணைந்து செயற்படுகின்றோம்.

இந்த மூலோபாயத் திட்டத்தை நிச்சயிக்கப்பட்ட காலப் பகுதியினுள் மீளாய்வுக்குட்படுத்துவதுடன் அதனை செயற்பாட்டுடன் பேணி வருவதற்குத் தேவையான சீர்படுத்தல்கள் அல்லது மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். மிகவும் சிறப்பானதொரு உலகத்தை தோற்றுவிப்பதற்காக இலங்கையின் உயர் கல்விக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் நடவடிக்கையில் மிகவும் பலம்மிக்க பங்களிப்பை வழங்குவதற்காக நாம் மூலோபாயத்தை தயாரிக்கும் செயற்பாட்டின்போதான உள்ளகக் கலந்துரையாடல்கள், விமர்சன ரீதியிலான சுய மீளாய்வு மற்றும் விபரமான பகுப்பாய்வு பயன்படுமென நாம் நம்புவதுடன் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எம்.பீ.பண்டார
பணிப்பாளர்
மஹபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியம்.